விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 மார்கழி 11 ர. ஆகிர் 23 இதழ் 315

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26-12-1986

UNIVERSITY [illegible] REC[illegible] 29-12-1986 PERIODICALS DIVISION

பலாலி முகாம்

## ராணுவத்திற்கு புதிய பாணியில் விசேஷ பயிற்சி அளிப்பு

சுன்னாகம், வியா.

பலாலி இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினருக்கு வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றினால் புதிய பாணியில் விசேஷ பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

குரும்பசிட்டி சுடலைக்கு அண்மையிலுள்ள ''உதய தாரகை' மன்ற விளையாட்டு மைதானத்திலேயே இராணுவத்தினருக்கு மேற்படி பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து 4 தினங்களாக அதிகாலை வேளையில் அளிக்கப்பட்டு வரும் இப்பயிற்சியில் சுமார் 200 இராணுவத்தினர் ஈடுபட்டுவருவதாகத் தெரிகிறது.

இவர்களுக்கு அளிக்கப்படும் இப்பயிற்சியின் போது பலத்த குண்டு வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணமிருக்கின்றன.

(5-ம் பக்கம் பார்க்க)

● தமிழ்ப் பகுதிகளில் சர்வோதய செயல்பாடு ● பூஸா தமிழ் இளைஞர்கள் விடுதலை

# புலிகளின் உள்ளூர் தலைவர்களை சர்வோதயக்குழு சந்திக்கும்

## வவனியா பௌத்த மதகுரு ஏற்பாடு

யாழ்ப்பாணம், வெள்ளி.

தமிழ் பகுதிகளில் சர்வோதய இயக்கம் இயங்குவது குறித்தும், மற்றும் பூஸா முகாமிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுவித்து அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது குறித்தும் விடுதலைப்புலிகள் உள்ளூர்த் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு சர்வோதய இயக்கத்தலைவர் திரு. ஏ ரி. ஆரியரத்தின தலைமையிலான விசேஷ குழுவொன்று விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளது.

மேற்படி குழுவினரின் வருகைக்கு வேண்டிய ஒழுங்குகளை வன்னிப் பகுதிச் சமாதானக் குழுத் தலைவரும் வவனியா கண்டி வீதி பௌத்த விகாரை பிரதம பிக்குவுமான வண. சியாம்பல சஸ்பவ விமலதார தேரோ மேற்கொண்டு வருகிறார்.

பயங்கரவாத சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு பூஸா முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களில் பாரதூரமான குற்றச்சாட்டுகளுக்குள்ளாகாதவர்களும், சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பவர்களுமே இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர்.

அண்மையில் அரசுத்தலைவர்களை நேரில் சந்தித்துப்பேசிய மேற்படி மதகுருவும், சர்வோதயப் பிரமுகர்கள் சிலரும் பூஸாவிலுள்ள தமிழ் இளைஞர்களின் விடுதலை தொடர்பாக தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருவதாகத் தெரிகிறது.

இந்த சமயம் பூஸா இளைஞர்களின் விடுதலை தொடர்பாக அரச தரப்புக் கருத்துக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் மட்டப் பொறுப்பாளர்களுக்குத் தெரிவிக்கும் முகமாகவே இந்தச் சந்திப்பு அமைகின்றது என்றும் அறியப்படுகிறது. [வவ-ஆ]

## ஆஸ்பத்திரி 'ஜெனரேட்டர்' பழுது அவசர சிகிச்சைப் பிரிவு செயலிழக்கும் அபாயம்

யாழ்ப்பாணம். வெள்ளி.

யாழ் போதனா வைத்தியசாலையிலுள்ள இரண்டு ஜெனரேட்டர்கள் பழுதடைந்த நிலையிலுள்ளதால் போதனா வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப் பிரிவு வேலைகள் செயலிழக்கும் அபாய நிலையில் இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் அச்சம் தெரிவித்தன.

400 கிலோவாட்ஸ், 6500 கிலோ வாட்ஸ் மின் சக்தியுடைய 2 ஜெனரேட்டர்களே பழுதடைந்தவைகளாகும்.

இதே வேளை மின்சாரம் துண்டிக்கப்பட்டோ பழுதடைந்தோவிட்டால் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் உயிராபத்தை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருப்பதால் இவற்றை உடனடியாகத் திருத்தித்தர வேண்டும் என்றும் இலங்கை மின்சாரசபையினரும் பிராந்திய மின் பொறியியலாளருக்கு ஆஸ்பத்திரி வட்டாரம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## 'இருதரப்பிலும் யுத்த நிறுத்தம் பேணப்பட்டது'

கொழும்பு, வியா.

''போர் நிறுத்தத்தை தமிழ் தீவிரவாதிகளும், இராணுவத்தினரும் நேற்றைய கிறிஸ்மஸ் தினத்தில் ஒழுங்காக கடைப்பிடித்தனர் இதனால்பல உயிர்ச்சேதங்களை இந்த புனித தினத்தில் தவிர்க்க முடிந்தது'' என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

## எச்சரிக்கையை அடுத்து இராணுவம் பின்வாங்கியது

[வல்வெட்டித்துறை நிருபர்]

வல்வெட்டித்துறை ராணுவ முகாமின் தெற்குப்பக்கமாக தோட்ட நிலங்களூடாக நேற்றுக்காலை வெளியே வந்த ராணுவத்தினர் அப்பகுதியில் புதிய பாதுகாப்பு அரண் ஒன்றை அமைக்க முற்பட்ட சமயம், அப்பகுதியில் காவலில் நின்ற விடுதலைப்புலிகள் ஒலி பெருக்கி மூலம் ''நீங்கள் கிறிஸ்மஸ்கால போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறுகிறீர்கள்'' என எச்சரித்து, வானத்தை நோக்கி மூன்று வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இந்த எச்சரிக்கை காரணமாகப் பின்வாங்கிய ராணுவத்தினர் முகாமுக்குத்திரும்பி அங்கிருந்து மோட்டார் ஷெல்களை ஏவினர் அதனைதொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

போர் நிறுத்தத்தை உத்தேசித்து விடுதலைப் புலிகள் எவ்வித தாக்குதலும் மேற்கொள்ளவில்லை.

## ஆசிரியர் இடமாற்றம் மே முதல் அமுல்

கொழும்பு, வியாழன்

ஜனவரி மாதம் முதல் வழங்கப்படவிருந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றம் மே மாதம் வரை பிற்போடப்பட்டுள்ளது.

சுமார் மூவாயிரம்பேர்வரையில் இடமாற்றம் பெற தகுதியுடையவர்களாக கணிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக ஆசிரிய நியமனம் வழங்கப்படும்போதே இந்த இடமாற்றமும் அமுல் நடத்தப்படுமாம் (எ)

பிரயாண ஒழுங்கு

GLORIA TRAVELS

★ Norway ★ Germany
★ France ★ Canada

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.

(A [illegible])

## ரயில் பயணிகள்

[வவனியா நிருபர்]

ஆனையிறவு முகாமில் நேற்று முன் தினம் ஏற்பட்ட பாதுகாப்பு அரண் மண் மூடைகள் சரிவை அடுத்து ஸ்தம்பிதமடைந்த போக்குவரத்தினால் ரயிலைத் தவறவிட்டு வவனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மன்றத்தில் தங்கியிருந்த சுமார் 600 ரயில் பயணிகளும் நேற்றுத் தமது [illegible] தொடர்ந்தனர். [illegible]

## தெ. ஆசியாவிற்கான கத். அச்சக தலைமையகம் யாழ் நகரில் அமையும்

யாழ்ப்பாணம். வெள்ளி

தெற்கு ஆசியாவிற்கான கத்தோலிக்க அச்சகத் தலைமையகம் யாழ். நகரில் நிறுவப்படவுள்ளது

புதுடில்லியில் அண்மையில் நடைபெற்ற தெற்கு ஆசியாவுக்கான கத்தோலிக்க அச்சக அமைப்பாளர்கள் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ். மறைமாவட்ட பிரதிநிதியும் சங்கத்தின் செயலாளருமாகிய வணக்கத்திற்குரிய அன்ரன் நட்டாயர் மகாநாட்டை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பியபின் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

மகாநாட்டில் அறுபத்தைந்து நாட்டின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (சி)

## வீடியோ உபகரணங்கள் புலிகளால் மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைப்பு

உருப்பிராய், வியா.

பலமாதங்களுக்கு முன்பு கொள்ளையிடப்பட்ட பல லட்சம் ரூபாய் பெறுமதியான வீடியோ உபகரணங்களின் ஒருபகுதி மீட்கப்பட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் வடக்கு 'புலவர் வீடியோ' நிலையத்திலிருந்து கடந்த ஆறுமாதங்களுக்கு முன்பு பலலட்சம் ரூபா பெறுமதியான வீடியோ உபகரணங்கள், ரொக்கம் என்பன கொள்ளையிடப்பட்டதும் இதனைத்தொடர்ந்து அப்பகுதி மக்களால் பெரியளவிலான மறியல்போராட்டங்கள் நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மீட்கப்பட்ட உபகரணங்கள் சிலதினங்களுக்கு முன்பு தமிழீழவிடுதலைப் புலிகளினால் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டன. (ரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001. [C6299]

சகலவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்டு நியாயவிலையில் விற்பனை செய்யப்படுகின்றன. மற்றைய நிறுவனங்களிலும் பார்க்க வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும் லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் 644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் முன்). C 6434

மெய்கண்டான் லீலா கலண்டர்கள், டயறிகள் போதிய கையிருப்பிலுண்டு கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள் மொத்த வியாபாரிகள் வியாபார ஸ்தாபனத்துக்கு அன்பளிப்பாக வழங்கக்கூடிய விலாசம் அடிக்கப்படாத கலண்டர்களுமுண்டு. மக்மிலன் புத்தகசாலை, 03, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C 6365)

மெய்கண்டான் கலண்டர்கள், டயறிகள், பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் கழிவு விலைக்குண்டு. அம்மா அச்சகம், புத்தகசாலை, உடுவில் ரோட், மருதனாமடம். C 6427

தரமான நவீன வீட்டுத் தளபாடங்கள், T.V, டெக், Pyrex கிளாஸ் வகைகள், Singer Zig Zag தையல் மெஷின், Formica மேசை, Fans, சகற்றேடியோக்கள், Electric Or-Fan, அமெரிக்கன் Pyrex Dinner Sets Tea Sets. Brass lamps, Fridge, கட்டில்மெத்தைகள், விருந்தை கதிரைகள், கண்ணாடி மேசைகள், Show case, பெரிய சிறிய அல்மாரிகள், Meat safe, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம், St Patrics வீதியருகில் C 6441

இரு வீடியோ டெக்குகள் E. M 370 நஷனல் (National) விற்பனைக்கு உண்டு. செ. இரவிக்குமார். முருகன் மில் தெல்லிப்பளை. (C 6448)

தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரம் New Key Bord றெமிங்டன் 26'', 18'' ஆங்கில தட்டச்சு போட்டபிள் Brother, அன்டலூட் பெரிது தொடர்பு, நிர்வாகி சங்கர், பிறிலியன் அக்கடமி, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி. [C-6523]

தும்பளை வீதிக்கு தெற்குப் புறமாக மணல் ஒழுங்கையில் 3½ பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. இரத்தினம், காரைக்கலட்டி, தும்பளை, பருத்தித்துறை (C 6370)

கோண்டாவில் இருபாலை வீதியில் இராசபாதை சந்தியில் 5 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு Ari Swaminathan No 246 Point Pedro Road, Irupalai Junction or Daini Cool Bar Irupalai Junction. (C 6507)

யாழ் / பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் 1½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு நேரடியாகத் தொடர்பு கொள்க. A B சபாநாதன், 14, மணல்தறை லேன், கந்தர்மடம் (C 6517)

## தேவை

டீசல் மெக்கானிக்- உழவு இயந்திரம்- வேல்டிங்- இன் சேற்றர்பம் சேவிஸ்- லேத் வேலை- மெக்கானிக்- எலக்ரிக் வெல்டிங்- கேஸ் வெல்டிங், கம்மாலை வேலை தெரிந்தோர் விண்ணப்பிக்கவும் புதுவாழ்வு நிலையம் கூளாவடி, ஆனைக்கோட்டை. C 6509)

யாழ்ப்பாணம், உடுவில்பகுதியில்இருக்கும் கற்பூரத்தொழிற்சாலைக்கு கற்பூரம் அடிக்க. பைக்கற்பண்ண அனுபவமுள்ள பெண்கள் தேவை பழக விருப்புபவர்களும் தொடர்பு கொள்ளவும் R. ஸ்ரீகாந்தன், 89 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். உடுவில் முகவரி!- சிவன் ஸ்ரோர்ஸ், செமயில்வாகனம், உடுவில் (C-6468)

கிளிநொச்சி கருணாநிலையத்துக்கு அதிபரும் மனையியல் ஆசிரியரும் தேவை. விபரங்களுக்கு டிசம்பர் 24ம் திகதி ஈழநாடு பார்க்கவும். [C 6485]

## சேவை

135 M M. கலர் பிலிம் சுருள்கள் எதவாகுலும் Processing and Printing செய்பவர்களுக்கு போஸ்காட் சைஸ் ரூபா 4-75 Proce sing only 20/- விபரங்களுக்கு கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். A-3357

உங்களிடமுள்ள பாவித்த வீட்டுப்பாவனைப் பொருட்களையும், தளபாடங்களையும் விற்கவோ, மாற்றுதல் செய்யவோ புதுப்பிக்கவோ தொடர்பு கொள்ளவும்: M. தியாகராஜன், 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். St. Patrics வீதியருகில். C 6442

மணமகன் மணமகள் தேவைகளுக்கும் எப்பொருள்களானாலும் ஆதனங்களுட்படவாங்கவும் விற்கவும். திட்டப்பரிசு விபரங்களுக்கு, எம்மை நாடுங்கள். புதியனவும் பழையனவுமாகும் நானாவித பொருள்கள் ஆதனங்களுட்பட மலிவு விற்பனைக்கிருக்கின்றன லக்கி பெனிபிட் கோலிமிட்டட், சந்திக்கருகாமையில் கோப்பாய். C 6394

அன்பான எமது வாடிக்கையாளரே தாங்கள் எம்மிடம் திருத்த ஒப்படைத்த மணிக்கூடுகளை 1985—1986 வரையானதும் தாங்கள் அக்காலஎல்லைக்குள் பெற்றுக்கொள்ள வேண்டியவற்றையும் தாமதியாது 1986 மார்கழி 31-12-86க்குள் பெற்றுக்கொள்ளுமாறு தங்களின் நன்மை கருதி தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். இங்ஙனம்: ரதி வாச் வேக்ஸ் நிர்வாகம், ரதி வாச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 44, 46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C 6540)

## SERVICES

Typewriters - We undertake Typewriter Repairs and Services Premises visited Contact: Fudo Enterprises, 39/17, Power House Road, (3rdLane) Jaffna. [C6452]

## மணப்பந்தல்

இதோ எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். ஞாயிறுக்கிழமையில் நேரே வரவும்: மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [C 6035]

## வகுப்புக்கள்

Quantity Surveying-Part-I (City and Guild - London) வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன Part II ஆனவகுப்பு 14-12-86 அன்று ஆரம்பமாகிவிட்டது Diploma in Draughtsmanship and Diploma in Quantity Surveying-1987 New Batch (English medium) ஜனவரி முதல வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன. 31-12-86க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர் உயர்கலைக்கல்லூரி-ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். C 6289

Spoken English புதிய பிரிவுகள் திங்கள், புதன், வெள்ளி காலை 6மணி—7மணி 9மணி 10மணி ஆரம்பம்: 29-12 86 S B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். C-6483

Radio, T V; வயறிங், வெல்டிங், பிளம்பிங், மோட்டோர் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது தொடர்பு:- Vispa Engineering Hall, 328 நாவலர் வீதி யாழ்ப்பாணம். (C-6502)

ஆண்டு 4, 5, 6, 7 8, 9 புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 2-01-1987, மொடேண் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி (C 6531)

Radio, T V., Video Deck செய்முறையுடன் வகுப்புக்கள் கற்பிக்கப்படுகின்றது புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம் 6-1-1987—நேரம் 9-00—11 00 a m 6-00—8-00 p m விபரங்கட்கு ElectroTechnical Insitution Kalvalai, Sandilipay (C 6536)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி. 301.

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னர் சதாசிவம் என்பவரின் மரணசாதன மற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர் பொன்னர் சதாசிவம் கைம்பெண் விசாலாட்சி மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை

மனுதார்

எதிராக

1. நடராசா யோகராசாவும்
2. பெண் சகுந்தலாதேவியும்

இருவரும் மயிலிட்டி தெற்கு தெல்லிப்பழை.

எதிர் மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனு 1987-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் திகதி

மு யோகசுமார்.
மனுதாரின் சட்டத்தரணி.

நீதிமன்ற ஆணைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
மல்லாகம் (C 6522)

## FOR SALE

Concrete Mixer and Silver Reed Electric Typewriter in good condition. Thandikai Vasa, Uduvil Road, Manipay. (C 65.7)

## கல்வி

ஐந்தாம் தரத்திலிருந்து G C E (O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தை புதிய பழைய கல்வித் திட்டத்திற்கமைய 18 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால், ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு நுணுக்கமான முறையில் குறைந்த காலத்தில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். மற்றும் (O /L (A /L )இற்குரிய கலை, வர்த்தக, விஞ்ஞான ஆங்கில பாடங்களும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். காலை 8-00 மணிக்குள் வீட்டிற் சந்திக்கவும். அல்லது கடிதத் தொடர்பு கொள்ளவும். ஆறுமுகநாதன், 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி, (C 6506)

## இயங்குகின்றன

யாழ்ப்பாணம், வெளியாழ். போதனா வைத்தியசாலையில் நீண்டகாலமாக இயங்காதிருந்த உள் இணைப்பு தொலை பேசிகள் மீண்டும் இயங்கத் தொடங்கி உள்ளன. (வா)

## சிகிச்சை

சுன்னாகம், வியாழன் தெல்லிப்பழை சுகாதார பகுதியினரால் சேவையில் விடப்பட்டுள்ள நடமாடும் அம்புலன்ஸ் வண்டி மூலம் தமது பகுதிக்கு உட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளித்து வரும் சொறி, சிரங்கு ஆகிய நோய்களுக்கான சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன.

சிகிச்சை நடைபெறும் ஒவ்வொரு நிலையங்களிலும் 200க்கு மேற்பட்ட நோயாளர்கள் வரை சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

சிகிச்சை அளிக்க செல்லும் டாக்டர்கள், சுகாதார பரிசோதகர்கள் தங்கள் அறிவுரைகளை வழங்கியும் வருகிறார்கள். (வா)

## இடமாற்ற அறிவித்தல்

13, 14 பெரிய கடையில் இயங்கிய ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ. ஸ்தாபனம் 79, கே. கே. எஸ். வீதி M O சுவிஸ் கூடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

**ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.**

[C 6428]

## அறிவித்தல்

சாரதா புத்தகசாலை என்னும் பெயரில் இயங்கி வந்த ஸ்தாபனம் நிருபா ரேடர் NIRUPA TRADER என இயங்கிவருகின்றதென்பதை வாடிக்கையாளர்கள் மற்றும் ஸ்தாபனங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்:

### நிருபா ரேடர்

### NIRUPA TRADER

★ பாடசாலை புத்தகங்கள் உபகரணங்கள் மற்றும்
★ உள்நாட்டு, வெளிநாட்டு சஞ்சிகைகள்
★ கலண்டர், டயறி வகைகள்
★ வாழ்த்து மடல்கள் அனைத்தையும்

மலிவு விலையில்பெற இன்றே நாடுங்கள்:

**நிருபா ரேடர்**

2, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

[A-3272]

முகவர் நிலையங்களுக்கான அங்கீகாரத்துடன் குடாநாட்டில் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## பிரயாண ஒழுங்குகள்

*டென்மார்க் *கனடா
*லண்டன் (U. K.) ★ஜெர்மனி

ஆகியநாடுகளுக்கு எமது முகவர் உடனுக்குடன் உங்களை அழைத்துச் செல்வார்,

சவூதி, குவைத்

கிளீனேர்ஸ், Gardeners, Labourers, Drivers இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும் வருமான ஒழுங்கு கூடிய கெதியில் செய்துதரப்படும்:

சிங்கப்பூர், குவைத்

பெண்களுக்கு வருமான ஒழுங்குகள் இருப்பிடமும் சாப்பாட்டு வசதியுடன் துரித கதியில் செய்து தரப்படும்.

பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற் முதலியன துரித கதியில் செய்து தரப்படும்.

# GROUP ATLANTIC TRAVELS

இல. 163, ஆஸ்பத்திரி வீதி; யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவில் முன்பாக (A 3223)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகச் செய்திகள்

## முடிவில்லாது தொடரும் வளைகுடா யுத்தம்
# ஈரான் தாக்குதலுக்கு ஈராக் பதிலடி
# 200 பேர் பலி; பலர் படுகாயம்

தெஹ்ரான், டிச - 25.

**ஈரானின் தெற்கு மேற்குப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக ஈராக் பலத்த விமானத்தாக்குதல்கள் நடாத்தியதில் இருநூறுபேர் வரை கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தும் பலலட்சம் டொலர்கள் பெறுமதியான கட்டடங்கள் சேதமாக்கப்பட்டுமுள்ளதாகவும் தெஹ்ரான் வானொலி அறிவித்துள்ளது.**

கடந்த ஆறுவருட காலமாக வளைகுடா பகுதியில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இவ்விரு நாடுகளும் போட்டி போட்டு பலத்த தாக்குதல்களை மாறிமாறி நடாத்திவருகின்றன.

இதனை முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு ஈரானை பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்ற நிர்ப்பந்திக்கும் வகையில் அதன் இராணுவ நிலையங்கள்மீது தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொள்ளவுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

ஈராக்கின் இந்த யோசனையை முறியடிக்கும் விதத்தில் கடந்தவாரம் ஈராக்கின் மூன்று முக்கிய நகரங்கள்மீது ஈரானிய விமானங்கள் பலத்த தாக்குதல்களை நடாத்தியுள்ளன.

இத்தாக்குதல்களில் நான்கு பேர் கொல்லப்பட்டு இருபதிற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். பாக்தாத் நகர் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் பல கைத்தொழில் ஆலைகள் சேதமாக்கப்பட்டன. வீடுகள் பலவும் குண்டுவீச்சுக்குள்ளாகி பலத்த சேதமடைந்துள்ளன.

இச்செயல்மூலம் ஆத்திரமடைந்த ஈராக், ஈரானுக்கு எதிரான பலத்த தாக்குதலை கடந்த சில தினங்களாக மேற்கொண்டுள்ளது. இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலொன்றில் ஈராக் விமானங்கள் ஈரானின் நகரங்கள்மீது இருநூறுதடவைகள் தாக்குதலை நடாத்தியுள்ளதாகவும் இதில் நூறுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாகவும் தெஹ்ரான் வானொலி மேலும் தெரிவித்துள்ளது.

இவ்விரு நாடுகளுக்குமிடையிலான யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு பல நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டுவந்தபோதும் இச் சமாதான முயற்சிகளை முறியடிக்கும் விதத்தில் இவ்விரு நாடுகளும் தொடர்ந்தும் யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றன. (சி)

## 'சாந்திவாஹினி' ஆதிவாசிகள்
# பங்களாதேஷில் தாக்குதல்
# 20 பேர் பலி; 50 பேர் காயம்

டாக்கா, டிச 25

பங்களாதேஷின் செங்கிழக்கு மாவட்டத்தில் ஆதிவாசி கலகக்காரர்கள் கடந்த சில தினங்களுக்கு முன் நடாத்திய தாக்குதலொன்றில் இருபது பேர் கொல்லப்பட்டதுடன் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாய் இரவு சுமார் 9 மணியளவில் 'சாந்தி வாஹினி' என்றழைக்கப்படும் இந்த ஆதிவாசி கலகக்காரர்கள் ராம்நகரில் திடீர் தாக்குதலொன்றை ஆரம்பித்தனர்.

இங்குள்ள பரா இராணுவ முகாமொன்றையும், எல்லைப்புறத்திலுள்ள முகாமொன்றையும் ராஜ்நகர் பொலிஸ் நிலையத்தையும் தாக்கியதில் இருபது பேர் கொல்லப்பட்டனர். ஐம்பதுபேர் காயமடைந்தனர்.

சாந்தி வாஹினி உறுப்பினர்களில் பெரும்பாலானோர் சக்மா இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நடாத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களில் ஆறுபேர் திரிபுரா, மார்மா இனத்தைச் சேர்ந்தவர்கள்.

இத்திடீர் தாக்குதலையடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் ராம்கர் நகரை விட்டு வெளியேறியுள்ளனர். ஆனால் தற்போது அந்நகர் அமைதியாக இருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பங்களாதேஷிலிருந்து இந்தியாவுக்கு புகலிடம்தேடிச் சென்றிருக்கும் இருபதினாயிரத்திற்கும் அதிகமான ஆதிவாசி இனத்தைச் சேர்ந்த சாந்திவாஹினி கலகக்காரர்களே இத்தாக்குதலை நடாத்தியுள்ளனர். இத்தாக்குதலின் விளைவுகுறித்து இந்திய அரசாங்கத்திடம் தாம் முறையிடப்போவதாகவும் அங்கிருக்கும் ஆதிவாசிகளை மீண்டும் பங்களாதேஷில் குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் பங்களாதேஷ் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (சி)

## எண்ணை கண்டுபிடிப்பு

டாக்கா, டிச. 25

பங்களாதேஷில் முதல் முறையாக 'ஷில்கட்' மாவட்டத்தில் எண்ணை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முதல்நாள் சோதனைப் பணியின் போது சுமார் 600 பீப்பாய் எண்ணை கிடைத்ததாக அதிகார பூர்வசெய்தி அமைப்பு தெரிவித்துள்ளது. [சி]


# பிரயாண ஒழுங்கு

'யூனிவேர்சல் ஏஜென்சி' ஸ்தாபனத்தாரின்

## பணிவானவேண்டுகோள்

இவ்வருட முடிவில் எமது வரவு செலவுக் கணக்கைப் பூர்த்தி செய்யத் தீர்மானித்திருக்கிறோம்;

அதையிட்டு எமது காரியாலயத்திலும், எமது உப-ஏஜென்சியுடனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பு கொண்ட அனைவரும் இம்மாத முடிவுக்குள் நீங்கள் தொடர்புகொண்ட விடயம் பற்றியும், உங்கள் கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரத்தையும், எமது காரியாலயத்திற்கு வந்து தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

எமது ஸ்தாபனத்திடம் கடன் பெற்றுச் சென்றோரின் பொறுப்பாளர்களும் தவறாது வந்து தொடர்பு கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் 1987ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான எமது பிரயாண ஒழுங்குகளின் விபரம்:

★ லிபியா

ஒயில் கம்பனி வேலையாட்கள்
(150 வெற்றிடங்கள்)

★ சவுதி அரேபியா

கிளீனேர்ஸ் OPEN VISA வயது 26-40
[160 வெற்றிடங்கள்]

★ குவைத்

ஏற்கனவே எம்முடன் தொடர்புகொண்டவர்களுக்கு மட்டும்.

பிரயாண ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன என்பதையும் அறியத்தருகின்றோம்.

அத்துடன்
பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் என்பனவும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

இத்துடன் நத்தார், புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்,

Universal Agencies
(யூனிவேர்சல் ஏஜென்சி)

125, [455] ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்-பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக]
[A 3265]


## றேகனுக்கு பெரும் தலையிடி

நியூயோர்க், டிச 25

அமெரிக்க உளவு ஸ்தாபன சி. ஐ. ஏ. யின் தலைவர் ஓராண்டுக்கு முன் எழுதிய ஈரானுக்கான அமெரிக்க இரகசிய ஆயுத விற்பனை தொடர்பான அந்தரங்க குறிப்பொன்று தற்போது வெளியிடப்பட்டது அமெரிக்க அதிபர் திரு. றேகனின் நிலையைப் பெரிதும் இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது.

பயங்கரவாதிகளுடன் பேரம்பேசமாட்டேன் ஈரானுடன் நல்லுறவு பேணமாட்டேன் எனக் கூறிவந்த அதிபர் திரு. றேகன் முதல் முறையாக ஈரானுக்கு ஆயுதங்களை இரகசியமாக விற்றது. மத்திய கிழக்கில் பணயக் கைதிகளாக இருக்கும் அமெரிக்கர்களை விடுதலை செய்வதற்காகவே என்று சி. ஐ. ஏ தலைவர் திரு. வில்லியம் கேஸியின் இந்த அந்தரங்கக் குறிப்பு திரு றேகனின் இரகசிய ஆயுத விற்பனைக் குட்டை உடைக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. றேகன் இவ்வாறு ஈரானுடன் இரகசிய ஆயுத விநியோக தொடர்புகளை கொண்டுள்ளார் என்ற உண்மை வெளியுலகில் தெரிய வந்தால் ஈரானின் மிதவாதிகளுடன் நல்லுறவு பேணுவதற்கான அரசியல் முயற்சியே இது என்று அதிபர் றேகன் உலகிற்குக் கூறுவார் என்றும் திரு வில்லியம் கேசி அப்போது இது பற்றி எழுதி வைத்துள்ளார்.

எனினும் சி. ஐ. ஏ. தலைவர் ஓராண்டுக்கு முன் எழுதிய அறிக்கை இப்போது அம்பலமாகி இவ் ஆயுத விநியோக சர்ச்சையை விசாரணை செய்ய வரும் விசாரணைக் குழுவின் கையிலும் அகப்பட்டுள்ளது. இவ் அந்தரங்க அறிக்கை கூறுவது உண்மையென நிரூபிக்கப்படும் பட்சத்தில் திரு. றேகனின் நிலை எவ்வாறிருக்கும் [illegible] என அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர். (சி)


# EGERTON GROUP

Wishes

All its friends and well wishers

and

particularly ROSARIANS OF MOTHER MARY

A Cheerful Season and
A Peaceful and Happy New Year.

We also express our appreciation and grateful thanks to

Mr. S. Siluvairajah and
his staff of YARL BEACH INN.

[A 3396] Joe Egerton and Staff.



# பிரயாண ஒழுங்குகள்

★ லிபியா:-

ஒயில் கொம்பனி லேபறேஸ் 1987-ம் வருடம் 16-ம் திகதிக்கு மேல் பயணம் தொடங்குகின்றது. 200 வேலையாட்கள் தேவை. செல்ல விரும்புவோர் வேண்டிய ஆவணங்களை எம்மிடம் சமர்ப்பிக்கவும்.

★ சவுதி அரேபியா:-

கிளீனேஸ் – 25 வயது முடிந்தவர்கள்மட்டுமே எடுக்கப்படுவார்கள் 200 பேர் தேவை. உடன் வந்து சந்திக்கவும்.

★ குவைத்:-

பணிப் பெண்கள் – 18 வயதுக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் உடன் நேரில் வரவும்.

★ டுபாய்:-

பணிப்பெண்கள் – 18 வயதுக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் மட்டும்.

★ குவைத்:-

ஹவுஸ் றைவேஸ் - வயது 18—35 வரை.

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும். சகலரும் நேரில் வந்து தொடர்புகொள்ளவும்.

டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்,
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள நியூ லிங்கம் சலூன் ஒழுங்கையால் வரவும்.

[A-3262]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மற்றவருக்கு இதமூட்டும் கனிவுதரும் ஒரு சொல், அல்லது செய்தி உன்னிடமிருக்கிறதா அதை மறந்து போகும் வரை காத்திருக்காதே. இன்றே இப்பொழுதே வெளியிட்டுவிடு.

— பவான்ஜேர்னல்

# இனப்பிரச்னைக்கு இடைக்காலத் தீர்வு: கம்யூனிஸ்ட் [இடது] கட்சி முன்வைக்கும் யோசனைகள்

## நமது நோக்கு

### கான்பூர் வெற்றி மகிழ்ச்சி தரவில்லையே!

கடந்த ஆண்டு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கட் பந்தயங்களில் இலங்கை அணியினர் வெற்றிபெற்றபோது ஜனாதிபதி ஜயவர்த்தன நாடு முழுமைக்குமே விடுமுறை அறிவித்து அனைவரையும் அந்த மகிழ்ச்சியில் பங்குகொள்ளும்படி செய்தார்.

ஆனால் அந்த கிரிக்கட் போட்டி நிகழ்ச்சிகளை நேரிலும் தொலைக்காட்சியிலும் பார்த்துக்கொண்டிருந்த எண்ணற்ற பார்வையாளர்கள் இலங்கையின் வெற்றி நேர்மையாகக் கிடைத்த வெற்றியல்ல என்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள். அந்தக்கருத்து இன்னமும் அவர்களிடமிருந்து மாறியபாடும் இல்லை. போட்டிகளுக்கு நடுவர்களாய் இருந்த இலங்கையர்களே இலங்கையின் வெற்றிக்கு உதவினார்கள் என்றும் இந்திய அணியினர் விக்கற்றுக்கு முன் காலைவைத்து பந்தைத் தடுத்தார்கள் [எல் பி. டபிள்யு] என அடிக்கடி அறிவித்து ஒருவர்பின் ஒருவராகப் பாசறைக்குத் திருப்பியனுப்பி இலங்கைக்கு வெற்றிதேடிக் கொடுத்தார்கள் என்பதும் இலங்கை நடுவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளாகும் என்றாலும் அக்குற்றச் சாட்டுகளை பெரிதுபடுத்தாமல் இந்திய கிரிக்கட் குழுவினர் தோல்விகளை ஏற்றுக்கொண்டு திரும்பினார்கள்.

வெற்றிபெற்ற இலங்கை அணியினரும்கூட அவ்வளவாக மகிழ்ச்சியடைந்திருக்கவில்லை. ஆனால் அதற்கு இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்ளும் விதத்தில் இந்தியாவின் கான்பூரில் நடந்துள்ள ஒருநாள் கிரிக்கட் போட்டியில் இலங்கை அணியினர் சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

இந்திய அணியின் முன்னணி ஆட்டக்காரர்களான கவாஸ்கர், கபில்தேவ், ஸ்ரீகாந் முதலியோரை மிக எளிதாக வீழ்த்தி பாசறைக்கு அனுப்பியபெருமை இலங்கைப் பந்துவீச்சாளர்களுக்குரியது. இந்திய அணியினர் அனைவரும் சேர்ந்தே 100 ஓட்டங்களைக்கூட குவிக்க முடியாமல் போனது ஆச்சரியத்துக்குரியது.

இதில் இந்திய நடுவர்களின் நேர்மையும் வெளிப்படையாயிற்று.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட ஒருநாள் கிரிக்கட் போட்டியில் இலங்கை பெற்றுள்ள ஒரு வெற்றியென்ற முறையிலும் அதனை நிகழ்த்தியுள்ள முறையிலும் இது ஒரு சாதனையே. கிரிக்கட் உலகில் இலங்கைக் குழுவினர் மிக அண்மையிலேயே பிரவேசித்தனர். அந்தவகையில் இது ஒரு குறிப்பிடக்கூடிய சாதனையென்று மதிப்பிடத்தக்கது.

இதில் இலங்கையர் அனைவரும் மகிழ்ச்சி கொள்ள நியாயமுண்டு விளையாட்டில் இன. மத, சாதி பேதங்களுக்கு இடமில்லை. ஆனால் இலங்கைக்குழு தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் முறையும், அதில் சிறுபான்மையினர் குறிப்பாக தமிழர் ஒருவர்தானும் மாற்ற ஆட்டக்காரராகக்கூட தேர்ந்தெடுக்கப்படாமையும் சந்தேகங்களுக்கு இடம் தருகின்றது. இலங்கை கிரிக்கட் சங்கம் விரும்பியிருந்தால் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்திருக்க முடியும்.

சிறுபான்மையினர் சார்பில் இரண்டொருவரைத் தேர்ந்தெடுத்து தீவிர பயிற்சியளித்திருந்தால் இலங்கைக்குழு முழுநாட்டையும் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கும்.

இந்திய அணியில் முழு இந்தியாவும் பிரதிபலிக்கும் விதத்தில் வீரர்களசேர்க்கப்பட்டிருப்பதை இவர்கள் கவனிப்பதுஅவசியம் வெற்றியென்றால் முழு இந்தியாவும் மகிழ்ச்சியடைகின்றது, தோல்வியென்றால் முழு இந்தியாவும் அதைப்பிரதிபலிக்கின்றது.

அந்த நிலை இங்கு இல்லையே!

கான்பூரில் இலங்கை அணியினர் சுவீகரித்துக்கொண்ட வெற்றியை தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மாத்திரமேகிறிஸ்மஸ் தினத்தில் பெருவிழா கொண்டாடியிருப்பார்கள். தமிழர்களும் ஏனையோரும் அதில் அதிக அக்கறையெடுத்திருக்க முடியாது.

வடக்குக் கிழக்கிலிருந்து இலங்கை அணிக்கு தமிழ் வீரர்களைச் சேர்த்துக் கொள்வதில் சங்கடமிருக்குமாயின் மலையகத்திலிருந்த கிலும் ஓரிருவரை சேர்த்திருக்க முடியாதா? மலையக இளைஞர்கள் சமீபகாலமாக சகலதுறைகளிலும் முன்னேறி வருகிறார்கள் தம்மை அடக்கி ஒடுக்கி அடிமைகளாய் வைத்திருந்த வெள்ளையர் அறிமுகப்படுத்தி தமக்கே உரியதாக்கி வைத்துக் கொண்டிருந்த 'கிரிக்கட்' விளையாட்டிலும் கூட மலையக இளைஞர்கள் வெள்ளையரே வியக்கும் விதத்தில் இன்று வளர்ந்துள்ளார்கள்.

அண்மையில் டிக்கோயாவில் இடம்பெற்ற கிரிக்கட் போட்டியொன்றின் போது அதில்கலந்து கொண்டு உரைநிகழ்த்திய இ. தொ. காங்கிரஸ் பொதுச்செயலர் திரு. எம். எஸ். செல்லசாமி 'இருநூறு ஆண்டு காலமாக தோட்டத் தொழிலாளர்கள் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வந்துள்ளார்கள். இவர்களுக்கு சகலதுறைகளிலும் சமசந்தர்ப்பமும் வாய்ப்பும்அளிக்கப்படுமானால் சர்வதேச அரங்குகளிலும் சாதனைகளை நிகழ்த்துவார்கள்'

எனக்குறிப்பிட்டார்.

இந்த நாட்டில்சகல இனத்தவர்களும் சமமாகவும் உரியவிதத்திலும் நடாத்தப்படுகிறார்கள் என்று உலகம் முழுவதையும் நம்பச்செய்வதற்கு பெரும்முயற்சி எடுத்துவரும் அரசாங்கம் நடைமுறையிலும் அதனை ஓரளவுக்காகுதல் செயல்படுத்தவேண்டும்.

கிரிக்கட் குழுவில் சேர்த்துக்கொள்வதற்கான தமிழ் வீரர்கள் இல்லையென்பது வேடிக்கை. இருப்பவர்களைத் தகுந்த பயிற்சி கொடுத்து முன்னேற்றமுடியாதா? அந்த வகையில் அதிகாரிகளுக்கு அதனை உணர்த்தவேண்டும் ...

இலங்கை இனப்பிரச்னைக்கு இடைக்கால அரசியல் தீர்வு ஒன்றை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) முன்வைத்துள்ளது இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ஏ. கே. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கை விபரம் வருமாறு:-

இன்றைய அரசாங்கம் இனப்பிரச்னையை மிகமோசமான நிலைக்கு இட்டுச் சென்றதன் பாரதூர விளைவுகளை முழு நாட்டு மக்களுமே வேதனையுடன் அனுபவித்து வருகின்றனர் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்கள்மீது ஏவிவிடப்பட்டுள்ள இன ஒடுக்கு முறை நடவடிக்கைகளால் அவர்கள் விபரிக்க முடியாத துன்ப துயரங்களுக்கு ஆளாகியுள்ளனர் அதேவேளை நாட்டின் பொருளாதாரம் பாரிய அளவில் சீரழிந்துள்ளது. மக்களின் வாழ்க்கைத்தரம் மோசமாகக் கீழ் இறங்கி வருகின்றது. ஒரு நாளைக்கு இரண்டு கோடி ரூபா வரை பாதுகாப்புக்காகச் செலவாகின்றது. சகல சுமைகளும் இந்நாட்டு உழைக்கும் வர்க்கத்தின்மீதே சுமத்தப்படுகின்றது யுத்தத்தின் மூலம் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண முடியாது என்ற நிலையை யூ. என். பி. அரசாங்கத்தில் உள்ள பலரும் இன்று உணர ஆரம்பித்துள்ளனர்.

இன்று தமிழ்மக்கள் உட்பட அனைத்து மக்களும் சமாதான வாழ்வையே விரும்புகின்றனர் அதற்கான ஆர்வ வெளிப்பாடாக ஓர் இடைக்கால அரசியல் தீர்வு காணப்படுவதை மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். அத்தகைய அரசியல் தீர்வு இனப்பிரச்னையை அடியந்தமாகத் தீர்த்து வைத்துவிடும் என்று யாரும் கற்பனை செய்யமுடியாது. குறுகிய காலத்தீர்வுக்கும் நீண்டகாலத் தீர்வுக்கும் உள்ள வேறுபாடுகள் பற்றி நாம் கவனம் செலுத்தத் தவறுவோமானால் நாம் தேடும் தீர்வுகளே மேலும் பெரும் பிரச்னைகளுக்கு வழிகோல இடமேற்படுத்திவிடும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்னையை வெறும் தமிழ்-சிங்கள இனப்பிரச்னையாகக் காண்பதும் அபாயகரமான நிலைக்கே எம்மை இட்டுச் செல்லும்.

நாட்டின் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளவிற்கு சர்வதேச ரீதியாக- அயல் நாடுகள்மூலமாக நேரடியானதும் மறைமுகமானதுமான தலையீட்டுக்கு இன்றைய பேரினவாத அரசின் இன ஒடுக்கல் வழிகோலியுள்ளது 1977க்குப் பின் யூ.என்.பி இலங்கையின் சுயாதீனத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு தாரை வார்க்க முனைந்தது திருகோணமலைத் துறைமுக வசதிகளை அமெரிக்காவிற்கு குத்தகைக்குவிடும் திட்டம் இந்தியக் குறுக்கீட்டால் முறியடிக்கப்பட்டது. 1988ல் திட்டமிட்ட இனவாத வன்செயல்களை இந்த அரசு நடத்தியதன் மூலம் இந்தியா நேரடியாகவே இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் வசதியினை உருவாக்கியது

இந்திய அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்னைத் தீர்வுக்கான முன்முயற்சியில் இருதரப்பினருக்கும் உடன்பாடான அரசியல் தீர்வை முன்மொழிவது வரவேற்கக்கூடிய ஒன்றேயாகும். ஆனால் நடுநிலைமை நன்றென்ற நிலைப்பாட்டை மீறி, இந்தியா தன் பிராந்திய அரசியலின் தேவைகட்கு ஏற்பத் தீர்வுகளை வற்புறுத்த முன்வர கூடாது.

இன்றைய விடுதலைப் போராட்டத்தின் இலக்கு முழு இலங்கையினதும் தேசியஇனப் பிரச்னையை மேலும் சிக்கலாக்குவதாக இருக்கக்கூடாது அது இலங்கையின் தேசிய சுயநிர்ணயத்தை இழப்பதற்கு-சுதந்திரத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்கு வழிகோலும். இலங்கையின் சுதந்திரத்திற்கும், இறைமைக்கும் அச்சுறுத்தல் மென்மேலும் அதிகரித்தவண்ணமே இருக்கின்றது. இது நாட்டு மக்கள் அனைவராலும் ஓரளவு உணரப்பட்டு வருகின்றது

ஆதலால், நாட்டின் சகல இன மக்களும் நெருக்கடி நிலை மேலும் வளர்க்காமல் உடனடியானஅரசியல் தீர்வுக்கு முன்வரவேண்டும் என அரசை வற்புறுத்தி வருகின்றனர். தமிழ் மக்களின் விமோசனத்திற்காகப் போராடிவரும் அனைத்துச் சக்திகளும் கூட இதனைக் கவனத்திலகொள்ள வேண்டும், இந்தச் சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகள் மூலமான ஓர் இடைக்காலத் தீர்வு இராணுவ சர்வாதிகார ஆட்சி ஏற்படுவதைத் தடுக்கவும் தமிழ் மக்கள் மீதானஇன ஒழிப்பு இராணுவ வன்முறையினை நிறுத்தவும். ஜனநாயக சக்திகளும் தமிழ் விடுதலைப் போராட்ட சக்திகளும். யூ என்.பி வலதுசாரிப் பிற்போக்குப் பாராளுமன்ற சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான வெகுஜனப் போராட்ட அணியை கட்டியெழுப்பவும் வாய்ப்பையும் அவகாசத்தையும் தர இயலும்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி [இடது] தமிழ் மக்களுக்குப் பாரம்பரிய பிரதேசங்கள் இருந்து வருவதையும் இலங்கைத் தமிழர் ஒரு தேசிய இனம் என்பதையும் ஆரம்பம் முதல் வலியுறுத்தி வருகின்றது. இவற்றை மறுதலிக்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை

நிராகரித்த நிலையிலேயே தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை எமது கட்சி அடையாளம் காண்கிறது இவற்றினை வலியுறுத்தி இடைக்கால அரசியல் தீர்வு பின்வரும் அம்சங்களைப் பிரேரணைகளாகக் கொண்ட தெளிவான உத்தரவாதங்களை உள்ளடக்கி இருப்பது அவசியம் எனக் கட்சியின் மத்திய கமிட்டி வற்புறுத்துகின்றது

1. தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரதேச சுயாட்சியமைப்புக்களாக்கப்பட வேண்டும்.

2. இப்பிரதேச சுயாட்சி அமைப்புகள் விரும்பினால் ஒன்றோடு ஒன்று இணையவும் அவசியமானபோது பிரிந்து தனித்தனியாக இயங்கவும் அவற்றுக்குப் பூரண சுதந்திரம் இருக்கவேண்டும்.

3 மத்திய அரசின் தலையீடற்றதுமான பொருளாதாரம், தொழில், உள்ளூர் பாதுகாப்பு, கல்வி, கலாசாரம், சுகாதாரம் சமூகசேவை ஆகியவற்றில் அதிகபட்ச சுதந்திரம் கொண்ட பிரதேச சுயாட்சி அமைப்புகளாக அமைதல் வேண்டும்.

4 இப் பிரதேச சுயாட்சி அமைப்பில் வாழும் முஸ்லிம் மக்கள் இந்திய வம்சாவளி மக்கள், சிங்கள மக்கள் என்போருக்கான சுயாட்சி உள் அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் வாயிலாக சகல இனத்தவர்களினதும் அடிப்படை மனித உரிமைகட்கும் மொழி-மத-கலாசார உரிமைகட்கும் பேணிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்

5. பிரதேச சுயாட்சிப் பிரதேசமொன்றில் அந்நிய ஆக்கிரமிப்பு இல்லாத சூழ்நிலையில் பாதுகாப்புக்கான பொறுப்பு சுயாட்சியிடமே விடப்படல் வேண்டும்.

6 பிரதேச சுயாட்சிப் பிரதேசங்களில் குடியேற்றங்களை நிறுவும் பூரண உரிமையை சுயாட்சி அமைப்புகள் கொண்டிருக்க வேண்டும். அதேவேளை அரசு பிரதேச சுயாட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஏற்படுத்த விரும்பும் குடியேற்றத் திட்டங்களை ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ சுயாட்சிகளுக்குப் பூரண உரிமை இருக்கவேண்டும்.

(7) தேசிய மட்டதிலும், பிரதேச சுயாட்சி மட்டத்திலும் இனம், மொழி சாதி போன்ற அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு எதிரான உறுதிமிக்க நடவடிக்கைகள் வரையறுக்கப்படல்வேண்டும்.

(8) வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்ந்து வரும் மலையக மக்கள், தமிழ் மக்கள் முஸ்லீம் மக்கள் ஆகியோரது அடிப்படை உரிமைகளை பாதுகாத்து நிற்கக்கூடிய சுயாட்சி உள் அமைப்புக்கள் உத்தரவாதப் படுத்தப்படவேண்டும்.

(9, தேசிய மட்டத்திலும், பிரதேச சுயாட்சி மட்டத்திலும் அரசாங்க இராணுவ, ஏனைய தலையீடற்ற முறையில் தேர்தல்களை நடாத்துவதற்கான உத்தரவாதம் இருக்க வேண்டும்.

(10) பொருளாதாரம், தொழில். கல்வி போன்ற துறைகளில் பின்தங்கிய சமுதாயப் பிரிவினராக இருந்து வரும் தாழ்த்தப்பட்ட மக்களின் சமுதாய முன்னேற்றத்திற்கான சலுகைகளும் வசதிகளும் அமைப்பு, ரீதியான உத்தரவாதத்துடன் வழங்கப்படல்வேண்டும்.

மேற்கூறிய பிரேரணைகளை ஓர் இடைக்கால அரசியல் தீர்வுக்கான அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என வற்புறுத்தும் எமது கட்சி அண்மைக்கால வருடங்களில் உருவாகிய யுத்த சூழல் ஏற்படுத்திய பிரச்சினைகளுக்கும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதன் அவசியத்தை முன்வைக்கின்றது.

(1) பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியன இரத்துச் செய்யப்பட்டு அதன்கீழ் கைதான

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பிரச்னை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் அனைவரும் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்படல் வேண்டும்.

(2 பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும், அவசர காலச் சட்டத்தின் அடிப்படையிலும் தேடப்படும் சகலரும் நிபந்தனையின்றி மன்னிக்கப்படவும் அவர்கள் மீதும் அதற்கு முன்பு கைதானவர்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பூரணமாக இரத்துச் செய்யப்பட வேண்டும்.

3. அரசியல் அமைப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற்று, தமிழ்மக்களின் கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கவேண்டும்.

4 அரசாங்க படைகள் குறிப்பிட்ட கால வரையறைக்குள் தமிழ்மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் இருந்து அகற்றப்படவும் இராணுவ முகாம்கள் மூடப்படவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

5 ஊர்காவல் படை கலைக்கப்பட்டு, வழங்கப்பட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

6 அரசாங்கப் படைகளாலும், ஊர்காவல் படைகளாலும் கொலை தீவைப்பு, கொள்ளையடிப்பு ஆகியவற்றால் ஏற்பட்ட இழப்புகளுக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும்.

7. அரசாங்கப் படைகளினதும், ஊர்காவல் படைகளினதும் அத்துமீறிய துன்புறுத்தல்களாலும் தம் வீடுகளையும், கிராமங்களையும் விட்டு நீங்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் தமது பழைய இடங்களுக்குத் திரும்பவும், தமது தொழில்களையும் வாழ்க்கையையும் அமைதியாக நடத்தவும் வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

8 அத்துமீறிய செயல்களில் ஈடுபட்ட படையினரும் ஊர்காவல் படையினரும் அரசாங்க தலையீடற்ற சட்ட விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்.

மேற்கூறிய நடவடிக்கைகள் தமிழ்மக்களது குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளில் ஒன்றான உயிருக்கும், உடைமைக்குமான பாதுகாப்புத் தேவையைச் சார்ந்தவையாகும். அரசு தன் படைகளையும் அரசியல் குண்டர்களையும் தொடர்ந்தும் தமிழ்ப் பிரதேசங்களில் வைத்திருக்க முயலுமானால் இடைக்காலத்தீர்வு முற்றிலும் செயற்படுத்த முடியாத ஒன்றாகிவிடும் என்பதை எமது கட்சி சுட்டிக்காட்டுகின்றது அதேவேளை மேற்கூறியவற்றைச் செயற்படுத்துமாறு பரந்துபட்ட வெகுஜன அமைப்புக்கள், பிரமுகர்கள் தேசபக்த சக்திகள், ஜனநாயக விரும்பிகள் அனைவரும் ஒருமுகப்பட்டு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் பரந்த இயக்கத்தை முன்னெடுக்கவேண்டும்

என இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இடது கோருகின்றது.

இடைக்காலத் தீர்வு என்பது பூரணமையான தீர்வாக இன்றைய சமூக அமைப்பினுள் அமைந்துவிட முடியாது என்பதில் எமது கட்சி தெளிவாகவே உள்ளது. இலங்கையில் வெகுஜனப் புரட்சியின் மூலம் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான மக்கள் ஆட்சி மலரும் வரை தேசிய இனப்பிரச்னைக்கு முழுமையான தீர்வு தேட இடலாது ஆயினும் நாம் தேடும் தற்போதைய தீர்வு இன்றைய கொடிய இன ஒடுக்குமுறையைச் சாத்தியமாக்கிய பிரச்னைகளையும், அது இனிமேலும் தலையெடுக்காமல் தடுக்கும் வழிவகைகளையும் ஏதுவாகக் கொண்டே பெறப்படல் வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

## தீர்மானம்

உரும்பிராய் வியாழன்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஆறு வரை உள்ள வகுப்புக்களையும் ஆரம்பிக்க வேண்டுமென இக்கல்லூரியின் அபிவிருத்திச் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளது இத் தீர்மானத்தை கோப்பாய் காத்தணிப் பாடசாலை அதிபர் பூ. க. இராசரத்தினம் ஊடாக யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் புதிய திட்டத்தின் படி கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகளில் உள்ள சில வகுப்புகள் மாற்றமடைவதால் இப் பிள்ளைகளுக்கு கஷ்டம் ஏற்படாத வகையில் கல்லூரியில் புதிய வகுப்புக்களை ஆரம்பிப்பதன் மூலம் நிவர்த்தி செய்யலாம் என்பது இப் பகுதி பெற்றோரின் கோரிக்கையாகும் (வா)

## போராளிக்கு அஞ்சலி

மட்டக்களப்பு வியா.

மட்டக்களப்பு ஆரையம்பதியில் விடுதலைப்புலிகளுக்கும், கமாண்டோ பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சுது என்பவர் (அரியான்) வீரமரணமடைந்தார். இவருக்கு வீர அஞ்சலியை புலிகள் செலுத்தியுள்ளனர்.

## படகு இயந்திங்கள் பறிமுதல்

சுன்னாகம், வியா.

படகில் மீன் பிடிக்கச்சென்ற கடற்றொழிலாளரின் மூன்று வெளி நீர்ணைப்புயந்திரங்களை கடற்படையனர் சேந்தாங்குளக் கடலில் வைத்து பறிமுதல் செய்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

சேந்தாங்குளக் கடலில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற சி. லாசறஸ் என்பவரதும் அவரது சகோதரர் இருவரதும் படகின் வெளியிணைப்பு யந்திரங்களைப் பலவந்தமாக கடற்படையினர் கழற்றிச் சென்றனராம். கரையில் இருந்து ஒன்றரை மைல் தூரத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. (வா)

## பலாலி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

புதிய பாணியிலான இப் பயிற்சியைப் பெறும் இராணுவச் சிப்பாய்களின் பாதுகாப்புக் கருதி இராணுவ 'சென்றிகள்' யாவும் பலப்படுத்தப் பட்டுள்ளன. (வா)

## ஆஸ்பத்திரி 'லிப்ட்' தொடர்ந்து பழுதடைந்த நிலையில்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் போதனா வைத்திய சாலையில் முக்கிய வார்ட்டாகக் கருதப்படும் 6 ஆம், 7 ஆம் வார்ட்டுகளுக்குரிய 'லிப்ட்' பழுதடைந்து ஆறு மாதத்திற்கு மேலாகியும் இதுவரையில் திருத்தப்படவில்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் வலை தெரிவித்தன.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள், மற்றும் 'ஷெல்' தாக்குதலுக்கு இலக்காகி காணப்படுபவர்கள் பெரும்பாலும் இந்த வார்ட்டுகளில் அனுமதிக்கப்படுவதால் அவர்களை அவசர சிகிச்சைகளுக்காகவும், உடனடிச் சிகிச்சைகளுக்காகவும் காயத்துக்குள்ளானவர்களையும் மற்றும் நோயாளிகளையும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தூக்கிச் செல்ல வேண்டியுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (வா)

## பயிற்சி ஆரம்பம்

பண்டத்தரிப்பு விய மூன்

"உப உணவு உற்பத்தியை அதிகரிக்கப் பெண்களும் தங்கள் பங்களிப்பைச் செலுத்த வேண்டும். இதற்காக வீட்டுத் தோட்டச் செய்கையில் அவர்கள் ஈடுபடவேண்டும்"

பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலையத்தில் இடம்பெற்ற விவசாயப் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் பண்டத்தரிப்பு விவசாய விரிவாக்க அலுவலர் திரு வை பாலகிருஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டார்.

நிலைய அதிபர் அன்னை பூலாவி தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சிநெறி ஆரம்ப வைபவத்தில் பண்டத்தரிப்பு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு சபா நாராயணன், காரைநகர் விவசாய விரிவாக்க அலுவலர் திரு ரி சண்முகசுந்தரம், தெல்லிப்புரம் விவசாயப் போதனாசிரியர் திரு கே சந்திரசேகரம், பண்டத்தரிப்பு கிராமச் சங்கத் தலைவர் திரு அ. வ. துரையப்பா ஆகியோரும் உரையாற்றினார்கள். [வா]

## சங்கம் தீர்மானம்

பண்டத்தரிப்பு வியாழன்

பண்டத்தரிப்பு பரிஷ் தென்னை பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் பனை உற்பத்திப் பொருட்களான வெல்லம், பாணி, கல்லாக்காரம், பனட்சினி, பனம் பூச்சாறு/ஜாம் ஆகியவற்றைத் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுவதென்று தீர்மானித்துள்ளது

சங்கத்தின் விற்பனை நிலையங்களைத் தவிர்ந்த இடங்களில் கள், சாராயம் ஆகியவற்றை விற்பனை செய்வதும், அருந்துவதும் சட்டவிரோதமானது என்றும் இவற்றை மீறுவோர் மீது சங்கம் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் சங்கத் தலைவர் திரு செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்துள்ளார். (வா)

## இடமாற்றம்

உரும்பிராய், வியாழன்

நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்த 35 கிளை முகாமையாளர்கள் அடுத்த வருட ஆரம்பம். தொடக்கம் இடமாற்றம் பெறவுள்ளார்கள்.

ஒரே கிளையில் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேல் கடமையாற்றியவர்களுக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## 500 ரூபா அபராதம்

பண்டத்தரிப்பு, வியா.

பண்டத்தரிப்பு - சித்தன்கேணி பிரதான வீதியில் இரவு வேளையில் மதும்பானதையில் நின்று போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்த இருவருக்கு தமிழீழ இராணுவ நீதிச்சபை 500 ரூபா அபராதம் விதித்தது

சங்குவேலியைச் சேர்ந்த மேற்படி நபர்கள் மாதகலில் தமிழீழ இராணுவத்தின் நீதிச் சபையின் முன்பு ஆஜர் செய்யப்பட்டு குற்றவாளிகளாகக் காணப்பட்டு இந்த அபராதம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் செய்யப்பட்டனர். [கி]

## ஆதனவரி

கொழும்புத்துறை, வியா.

யாழ் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களினால் பெறப்பட்டுவரும் ஆதனவரி அறவிடும் வேலைகளை துரிதப்படுத்தும்படி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணித்துள்ளார்.

இது சம்பந்தமான சுற்றுநிருபமொன்று உள்ளூராட்சி ஆணையாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

இப்பொழுது
காண்பிக்கப்படுகிறது
லிடோ
10-30, 2-30, 6-30
மோகன் - சுஹாஷினி
மூர்த்தி நடித்த
நெஞ்சத்தைக் கிள்ளாதே
கலர் (புதிய பிரதி)

கடைசி சில தினங்கள்
வெலிங்டன் திரையில்
10-30 2-30 4 30 6-30
Samantha Fox
in
TOO HOT TO HANDLE
Action, Thrill, Sex
(Strictly Adults only)
அடுத்து
BABY
[Color]

31-ம் நாள் அந்தியேட்டி அழைப்பு



திருமதி
கந்தசாமி நாகரத்தினம்
(மாணிக்கம்)
மலர்வு: 1912 06-10
உதிர்வு: 1686-11 26

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்த எமது அன்னை திருமதி கந்தசாமி நாகரத்தினம் (மாணிக்கம் எம்மை விட்டுப் பிரிந்து இன்று 31 நாட்கள் பூர்த்தியாகின்றது அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 1986-12-26 வெள்ளிக்கிழமை (இன்று) அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வீட்டுக் கிரியையில் இவ்வழைப்பினை ஏற்று உற்றார் உறவினர், நண்பர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி
இங்ஙனம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
செக்கர் கந்தசாமி வீதி, சுன்னாகம்.

(C 6549)

3 வதுமாத நினைவஞ்சலி



அமரர்
கனகராசா
கதிரமலை
(வட பிராந்திய சர்வோதய வெளிக்கள இயக்குநர்)

தோற்றம்: 5-8-1953
மறைவு: 1986-09-26

சேவைக்கு ஒரு தலைவன்
செல்வத் திருமகனே
ஈழத் தமிழ் போற்ற
இன்னல் களைந்து தெறிந்த
சாணக்கிடைக்காத - திரு
கதிரமலை அண்ணை இன்று
மீளா உலகடைந்து
முடிந்ததே மூன்று மாதம்
மாதங்கள் மறைந்தாலும்
மறையாது அவன் - செய்த சேவை
காலன் அவன் காலை இன்றி
கண் நிறைந்த
துணைவியுடன் - அவன்
பெற்றோரையும் பறித்த பின்பும்
நற்சேவை செய்த
நல்ல புகழ் கதிரமலையின்
முத்தான சேவை வாழ்க!
வட பிராந்திய சர்வோதய ஊழியர்கள்.
(C 6548)

பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. லிகிதர்/தட்டெழுத்தாளர் (தமிழ்/ஆங்கிலம்)
2. அலுவலக உதவியாளர் (க. பொ. த சாதாரணம் சித்திபெற்றவராயிருத்தல் வேண்டும்)

விண்ணப்பங்கள் தபால்மூலமோ அல்லது நேரடியாகவோ கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்கு 31-12-1986ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

முகவரி:- செயலாளர்,
றெடோ REDO)
76, கண்டி வீதி,
சுண்டிக்குளி.
யாழ்ப்பாணம்.

[C-6557]

SHINE INSTITUTE
தெல்லிப்பழை
87 A/L விலங்கியல்
ECOLOGY (சூழலியல்)
ஆரம்பம்:- 26-12 86 வெள்ளி - 5 பி. ப.
88 A/L SKELETON (வன்கூடு)
ஆரம்பம்:- 30-12-86 செவ்வாய் - 4 30 பி ப.
87-ம் ஆண்டுக்குரிய மீட்டல் வினாவிடை
செவ்வாய் — 2-30 பி. ப.
வெள்ளி — 3-00 பி. ப.
ஆசிரியர் - ஆர். ஈசன்
[C-6550]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நெல்உற்பத்தியில் தன்னிறைவு பெறுவோம்"

## கருத்தரங்கில் பேச்சு

மாவிட்டபுரம், வியா "விவசாயியின் உரம், பசளை என்று அளவுக்கதிகமாகச் செலவுசெய்வதை விடுத்து சணல் உற்பத்தியாக்கி 50 சத வீதம் பூக்கத் தொடங்கியதும் அதை அடிக்கட்டுப் பசளையாக உபயோகித்தல் அதிக பயனைப் பெறமுடியும்'.

இவ்வாறு மாவை லயன்ஸ் கழகம், அளவெட்டி வடக்கு சனசமூக நிலையம் ஆகியன இணைந்து நடத்திய விவசாயக் கருத்தரங்கில் உரையாற்றிய திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய விவசாய உத்தியோகத்தர் திரு. இரகுபதி கூறினார்.

அளவெட்டி வடக்கு ஞானோதய வித்தியாசாலையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில், தரிசு நிலங்களை வளப்படுத்தி நெற் செய்கையை மேலும் அதிக அளவில் மேற்கொண்டால் நெல் உற்பத்தியில் நாம் தன்னிறைவடைய முடியும் என்றார்.

மற்றும் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திரு. குகதாசன், விவசாய உத்தியோகத்தர்கள் திருவாளர்கள் குமாரவேல் தேவசபை, பேர்ம்பநாதன், சுதிரமலை ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

சனசமூக நிலையப் போஷகர் திரு. இராமசாமி நன்றி கூறினார். [ர]

## சபையில் தீர்மானம்

உரும்பிராய், வியா நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க தெறியாளர் சபைக் கூட்டம் கடந்த வாரத்தல் திரு. பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு வளர்ச்சிக்கும், மக்களின நலனை கருத்தில் கொண்டு உழைத்த யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. ச. வேலாயுதபிள்ளையின் இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படி கூட்டுறவு ஆணையாளரையும், மற்றைய அதிகாரிகளையும் கோருவதென்றும்; யாழ் மக்களின் அத்தியாவசிய பொருளாகிய விறகுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலையை 50 வீதம் அதிகரித்தமையால், ஏற்கனவே பொருளாதாரக் கஷ்டத்தை அனுபவிக்கும் மக்கள் மேலும், மேலும் கஷ்டத்தை அனுபவிப்பதால் முன்னைய விலையில் விற்கும்படி அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தை வேண்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ரஃ)





**வலிக்கும் காய்ச்சலுக்கும் எதிரான ஒவ்வொருவரும் நம்பக்கூடிய நிவாரணி.**

வலியோ, காய்ச்சலோ தாக்கும்போது ஒவ்வொருவரும் நம்பக்கூடிய நிவாரணி ஒன்றுண்டு. அது-தான் - பனடோல்.

வலிக்கும், காய்ச்சலுக்கும் எதிரான சக்தி மிகு துரித நிவாரணியான பனடோல் அதிமென்மையான வயிற்றைக்கூடப் பாதிப்பதில்லை! பனடோல் இதமானது, மழலைச் செல்வங்களுக்குக்கூட பயமின்றிப் பருக்கக்கூடியது.

காய்ச்சல், தலைவலி, பல்வலி, நங்கையர் நலக்குறைவு போன்ற பல்வேறு உபாதைகள், உபத்திரவங்களுக்கெதிராகச் செயற்படும் பனடோல், உலகெங்குமுள்ள டாக்டர்களால் சிபார்சு செய்யப் படுகிறது. உங்கள் வீட்டிலும் பனடோல் உண்டு என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.




விலை - வில்லையொன்று 50 சதம்

**பனடோல்**

பரசிற்றமோல் வர்க்கத்தைச் சார்ந்தது.

தயாரித்து விநியோகிப்போர் மக்வூட்ஸ் - விந்த்ரெப் லிமிட்டெட்

**துரிதநிவாரணி... அது வயிற்றைக் கூடப்பாதிப்பதில்லை.**

JWT MW 1530

### 1-வது ஆண்டு நினைவஞ்சலி



தர்மலிங்கம் திலகேந்திரன்
(சுங்கத் திணைக்களம் யாழ்ப்பாணம்)
தோற்றம்:- 27- 03- 1951
மறைவு:- 05- 01- 1986
திதி:- 26- 12- 1986

எங்கள் தெய்வமே! எங்களை விட்டு பிரிந்து ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும் இன்னும் எமது நெஞ்சில் சிரஞ்சீவியாய் வாழ்ந்து கொண்டிருக்கும் உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால்வாடும்:
அம்மா, மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்,
உறவினர்கள்,
நண்பர்கள்.
அரியாலை.

(C 6528)

### 2-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி குணமணி இரட்ணசபாபதி
பிறப்பு:- 04- 05- 1918
இறப்பு:- 18- 12- 1984
திதி:- 26- 12- 1986

தாங்கள் எம்மைவிட்டகன்றாலும் உங்கள் வற்றாத அன்பு. தளராத அணைப்பு, அகமும், முகமும் மலர்ந்த வரவேற்பு எல்லாம் எங்கள் மனதில் பசுமையாகி என்றும் எங்கள் வாழ்வின் பாதையை வழிநடத்தும் உங்கள் ஆன்மா சாந்தியடைய வேண்டி ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

கணவன், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
ரிபேக் பாம்,
7 ம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

(C 6504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிய காலத்தில்
Computer Programming
and Data Processing

**Basic Language**

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
03-01-87 சனி, ஞாயிறு வகுப்புகள் 3 மாதம்
05-01-87 திங், புதன், வெள்ளி வகுப்புகள் 2 மாதம்
மொத்தக் கட்டணம் 750/- மட்டும்.
சேரும்பொழுது செலுத்த வேண்டியது 500/- மட்டும்.
O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

**Unikco Computer Center**
282, யாழ்ப்பாண ரோட், மானிப்பாய். [C6545]

---

யாழ். மாவட்டத்தில்
தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில்

## ஆண்டு 6 வகுப்பிற்கான அனுமதிப் பரீட்சை-1987.

மேற்படி பரீட்சை 1987-01-31ந் திகதி சனிக்கிழமை பின்வரும் பாடசாலைகளில் குறித்தொதுக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும்:

1. யா/இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
2. யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
3. யா/யாழ். இந்துமகளிர்கல்லூரி, யாழ்ப்பாணம்.

பின்வரும் மாதிரிப்படிவத்தில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் மேற்படி பாடசாலைகளின் அதிபர்களால் 1987-01-23ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்படிவத்துடன் பரீட்சைக் கட்டணம் ரூபா ஐந்து (5/-) விண்ணப்பிக்கும் பாடசாலை அதிபருக்கு தற்பொழுது படிக்கும் பாடசாலை அதிபருக்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
23-12-86.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்.

அதிபர்,
யா/.........................

யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் ஆண்டு 6 வகுப்பிற்கான அனுமதிப் பரீட்சை-1987.

01. மாணவர் பெயர்:-
02. பால்:-
03. பிறந்த திகதி:-
04. தற்போது படிக்கும் வகுப்பு;-
05. தற்போது படிக்கும் பாடசாலை:-
06. சாதியம்;-
07. சமயம்:-
08. பெற்றோர்/பாதுகாவலர் பெயர்:-
09. முகவரி (நிரந்தரம்):-

மேலே தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையென உறுதிப்படுத்துகிறேன்.

மாணவர் கையொப்பம்: பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

மாணவர் தற்போது கல்விகற்கும் பாடசாலை அதிபரின் உறுதியுரை.

மேற்படி மாணவன்/மாணவி தற்போது ஆண்டு 5இல் படிக்கிறார் எனவும் 9.../.../...ந் திகதி பிறந்தவர் என்பது பாடசாலையிலிருக்கும் பிறப்புச் சாட்சிப் பத்திரப்படி சரியெனவும் உறுதிப்படுத்துகிறேன். இம் மாணவன்/மாணவி என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

மாணவர் கையொப்பம்:-
திகதி:-

[A3391] அதிபரின் கையொப்பம்.

---

### மின் இணைப்பு

உரும்பிராய் விபமூல் கோண்டாவில் வடக்கு காளி கோயில் வீதி விஸ்தரிக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்படவுள்ளதுடன் மின் இணைப்பும் பெறவுள்ளது.

ஸ்ரீ வகீஸ்வரி சன. சமூக நிலையத்தினரின் பெரு முயற்சியால் கிடைக்கவுள்ள மின் இணைப்பினால் இப் பகுதியில் வாழும் மக்கள் பெரிதும் நன்மையடையவுள்ளார்கள்.

### ஐக்கிய நாணய சங்க உறுப்பினர்

மானிப்பாய் வியாழன் திருநெல்வேலி கலாசாலை ஐக்கிய நாணய சங்கம் இம் மாதம் 5-ம் திகதி புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிராந்திய கூட்டுறவு அதிகாரி திரு த கந்தசாமி தலைமையில் இதுசம்பந்தமான கூட்டம நடைபெற்ற போது பின்வருவோர் சங்கத்தின் புதுவருட உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: திரு: சு. பசுபதி, உபதலைவர்: திருமதி நா பொன்னையா, செயலாளர்: திரு. ந ஜெயதிலகன்,

### இன்றைய பலன்

மாதம்:- மார்கழி
திகதி;- (11) 26-12-86
கிழமை! வெள்ளி
திதி;- தசமி
நட்சத்திரம்:- சித்திரை

மேடம்: மேலிடத்து உறவு உற்சாகத்தையளிக்கும். விருந்துபசாரத்திற்கும் இடமுண்டு. புண்ணியமான வாழ்வும் சேரும்

இடபம்:- தொழில் துறையில் எதிர்பாராத நஷ்டமுண்டு. புதிய முதலீடுகளை ஒத்திவைக்கவும், யோக்கியாத்தை ஒத்தி வைக்கவும் நிதானம்,

மிதுனம்:- எதையும் துரிதமாகச் செய்வீர்கள். குருவின் ஆசியால் முன்னேற்றமடைவீர்கள். தெய்வ சிந்தையும் மேலோங்கும்,

கடகம்:- உழைப்பினால் முன்னேற்றமுண்டு. வியாபார விருத்தியுண்டு. இடப் பிரிவும் ஏற்படலாம்.

சிம்மம்:- பணபலமுண்டு பரவசமூட்டும் செய்தியுமுண்டு தொழில் லாபமுமுண்டாம்.

கன்னி:- பகை மூட்டம் வட்டமிடும். நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படும். குடும்பத்திலும் பூசல்கள் தோன்றலாம். பொறுமை நன்று

துலாம்: மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும், தொல்லைகளும் தோன்றலாம் தொழில் வீழ்ச்சிக்கும் இடமேற்படும்.

விருச்சிகம்;- காதலர்களுக்கு பொன்னான முத்தான சந்திப்பொன்று முன்னேற்றத்திற்கு வழிகாட்டும். கடமையிலும் அதிக ஆர்வம் பிறக்கும

தனுசு: வாழ்க்கையிலும் சோதனை தென்படும் தொழிலிலும் மந்தநிலை தோன்றும் அரச பயத்திற்குமிடமுண்டாம்,

மகரம்: இதயம் இன்பத்தால் விம்மும், வளமான வாழ்வுமுண்டு, சிலருக்கு வாகன லாபமும் கிட்டலாம்.

கும்பம்:- பொன் பொருள் லாபமும் உண்டு மனம் போல வாழ்வு மலரும் தொழிலிலும் ஒத்துழைப்புக் கிடைக்கும்

மீனம்: உடல் நலமும் பாதிக்கப்படலாம். எதிலும் விரக்தி தோன்றும். குடும்பத்திலும் பிரிவுகள் தோன்றலாம் அடக்கம் விரும்பத்தக்கது.

திருமலை
வே. ரவீந்திரன்

---

# தாவரவியல் AL 88

அலகு- 05 தாவர இராட்சியப் பிரிவினைகள்
ஆரம்பம் 27-12-86 (சனி)
நேரம்: சனி,ஞாயிறு 6-00-700 காலை

ஆசிரியர் திரு. பாலா
**Niru Tuition Centre**
KONDAVIL. [A3271]

---

### கேள்வி அறிவித்தல்

01-01-87 முதல் 31-12-87 வரைக்கான காலப் பகுதிக்கு கீழ்க்காணும் குத்தகைக்கான கேள்விகள் 31-12-86-ம் திகதி முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்படிவங்களை 30-12-86 பிற்பகல் 3 00 மணிவரை கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையில் காட்டப்பட்டவாறு படிவ கட்டணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும் இவ் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. மீன்சந்தை (கரப்பன்காடு) | 2350-00 | 300-00 | 100-00 |
| 02. ஆட்டிறைச்சிக் கடை (கரப்பன்காடு | 10150-00 | 2000-00 | 200-00 |
| 03. மாட்டிறைச்சிக் கடை (கரப்பன்காடு) | 33360-00 | 2000-00 | 200-00 |

செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா. (A 3397)

---

### ஈட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு 1787

யாழ்ப்பாணம் வேம்படி ரோட்: அந்தோணிப்பிள்ளை லுடிக்கனஸ், — வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம் பாஷையூர் 2ம் குறுக்குத்தெரு வெலிச்சோர் அருளானந்தம் — எதிராளி

மேற்படி இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டு கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனத்தை 1987ம் ஆண்டு தை மாதம் 28ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக்காணியிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### தீர்வைத்தொகை

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 18575/-ம் மேலும் ரூபா 15000/-க்கு 23-11-1983 தொடக்கம் 05-12 1984வரைக்கும் வருடமொன்றுக்கு 36% வீத வட்டியும் அதன்பின் தீர்வைத் முழுத் தொகைக்கும ஆறுக்கப்படும் சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 1% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபாய் 4730/- 30 சத்துக்கு விற்பனவு செலார்களும். தீர்வைத் தொகையில் ரூபா 6000/- கொடுக்கப்பட்டிருக்கிறது.

#### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணம் பகுதி சுண்டிக்குளிக் கோவில்பற்று பாஷையூர் இறை ''சின்ன பெஞ்ஞான் வளவும் சின்ன பெஞ்ஞான் சுந்தன்குடியிருப்பும் சின்ன பெஞ்ஞான் தலை மடையும்'' இதில் வடக்குப்பக்கமாக நில பர குளி 17—15 இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு ஒழுங்கை, மேற்கு ஒழுங்கையும் யோசேப் சின்னராசாவும் பெண் பவுளராணிக்குரிய ஆதனம், இக்குளி 17-15லும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சு. பொ. நவரத்தினம் அவர்களால் 15-07-1977ம திகதி 351ம் இலக்கத்துடன் வரையப்பட்ட படத்தின்பிரகாரம் துண்டு 3 குறிப்பிடப்பட்டுள்ள பகுதிக்காணி குளி 3 75 இதற்கெல்லை கிழக்கு குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 2 எனப்பட்ட வெலிச்சோ மிக்கேலின் ஆதனமும் அதேவரைபடத்தில் 5 எனக்குறிப்பிடப்பட்டுள்ள 5' கையொழுங்கையும், வடக்கு ஒழுங்கையும், மேற்கு ஒழுங்கையும் யோசேப் சின்னராசாவுக்கும பெண் பவுளராணிக்குரிய ஆதனமும் தெற்கு குறிப்பிடப்பட்ட வரைபடத்தில் துண்டு 4 எனப்பட்ட சூசைமுத்து கைம்பெண் பிரான்சிஸ்கா அல்லது வசிந்தாவின் ஆதனமும் வரைபடத்தில் 5 எனப்பட்ட 5' அடி கையொழுங்கையும் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும் குறிப்பிட்ட வரைபடத்தில் 1 என இலக்கமிடப்பட்ட வட கிழக்குக் காணியில் பங்காட்டியும் அதிலுள்ள கிணற்றில் பாவிப்புரித்தும்.

அ. ஜெகநாதன்,
தொழிலாளரும் விலைமதிப்பாளரும்,

16A, அம்மன் வீதி,
நல்லூர்மடம்,
யாழ்ப்பாணம். [C-6537]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

26 12 86 வெள்ளிக்கிழமை


# "அடகு நகைகளை மீளளித்தால் மட்டுமே மறியல் போராட்டம் கைவிடப்படும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"அடகு வைத்தோர் சங்கம் இன்று எழுத்துமூலம் சமர்ப்பித்துள்ள தமது கோரிக்கைகளுக்கு மக்கள் வங்கி அதிகாரிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து அடகு நகைகளை உடன் மீளளிக்கும்பட்சத்தில் மாத்திரமே மறியல் போராட்டம் கைவிடப்படும். அல்லாவிடத்து திருப்திகரமான முடிவு கிடைக்கும் வரை மறியல் போராட்டம் தொடரும்"

இவ்வாறு அடகு வைத்தோர் சங்கம் நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"வங்கி நிர்வாகத்துடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் தொடர்பாக சங்கம் தனது கோரிக்கைகளை எழுத்து மூலம் இன்று சமர்ப்பித்துள்ளது.

அடகு நகைகளை மீட்க பணம் செலுத்திய, பணம் செலுத்தாதவர்களை பூரண விபரங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது" [வா]

## 1500 ரூபா ஊக்குவிப்புப் பணம்

கொழும்பு, வியாழன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு திணைக்களத் தலைவர்களால் இடமாற்றம் செய்யப்பட்டவர்களுக்கும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள ஊக்குவிப்புப் பணம் பெறக்கூடியவர்களுக்கும் அடுத்த மாதம் மேலதிகமாக 1500 ரூபா கிடைக்கவுள்ளது.

இவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக மாதம் 500 ரூபா வீதம் வழங்கப்படும். இவை நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்களுக்கு ஒரே முறையில் கிடைக்கும். (எ)

## வயோதிப மாது பலி

வேலணை, வியாழன்

கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்த வயோதிப மாது ஒருவர் தவறி கிணற்றில் வீழ்ந்து நீரில் மூழ்கியதால் மூச்சுத் திணறி மரணமானார்.

இப்பரிதாப சம்பவத்துக்குள்ளானவர் வேலணை பங்களாவடியைச் சேர்ந்த திருமதி அச்சிமுத்து சந்தையா (வயது 83) என்பவராவார். [ஒ]

## மக்கள் வங்கி ஊழியர்கள் சம்பளம் பெற்றனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

மக்கள் வங்கிகளின் முன் அடகு வைத்தோர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் மறியல் போராட்டத்தின் மத்தியிலும் மக்கள் வங்கி ஊழியர்கள் சம்பளத்தை ஏதோ ஒருவழியில் பெற்றுள்ளதாக அறியப்படுகிறது.

வடபிரதேச மக்கள் வங்கி பிராந்திய அலுவலக ஊழியர்கள் இலங்கை வங்கி மூலம் 'ரூவ்ற்' ஒன்றைப் பெற்று அதன் மூலம் தமது மாதச் சம்பளத்தை எடுத்துக்கொண்டதாகவும் ஏனைய மக்கள் வங்கி ஊழியர்கள் தவ்வப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தமது சம்பளத்தைப் பெற முயற்சித்து வருவதாகவும் தெரியவருகிறது. [வா]

## குடும்பப்பெண் தற்கொலை

பண்டத்தரிப்பு, வியாழன்

சித்தன்கேணியைச் சேர்ந்த குடும்பப்பெண் ஒருவர் நச்சுக்காயை உட்கொண்டு தன்னுயிரை மாய்த்துக்கொண்டார். மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிறிது நேரத்தில் இவர் உயிர் பிரிந்தது.

## கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ்ப்பகுதியில் 1987-ம் ஆண்டிலிருந்து சேவையாற்றி வரும் தனியார் தொலைக்காட்சி சேவை, மினிசினிமா, வீடியோ சென்ரர், ஒலிபெருக்கி - தனியார் விளம்பர சேவை ஆகிய சகல ஒலி ஒளி சேவையாளருக்குமான அனுமதிப்பத்திரங்கள், செயற்பாட்டு விதிமுறைகள் ஆகியவை வழங்குதலுக்கான பொதுக்கூட்டமொன்று தமிழீழ ஒலி ஒளி சேவை கட்டுப்பாட்டு சபையினரால் நாளை 27-ம் திகதி காலை 10-00 மணிக்கும், சகல அச்சகத்தினர், பிரசுரகர்த்தாக்கள், வெளியீட்டாளர்கள் ஆகியோருக்கான ஆலோசனைக் கூட்டம் மாலை 2-00 மணிக்கும் யாழ். வின்சர் திரையரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## விபத்தில் பலி

பருத்தித்துறை, வியாழன்

மந்திகையில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் சிக்கிய வயோதிபரொருவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

புலோலி தெற்கைச் சேர்ந்த எஸ். நடேசு (வயது-72) என்பவரே மோட்டார் சைக்கிள் விபத்தில் பலியானவராவார்.

இவ்விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களும் காயங்களுக்குள்ளாகி மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

## நடமாடும் வைத்திய பிரிவின் சொறி, சிரங்கு சிகிச்சைத்திட்டம்

மாவிட்டபுரம், வியாழன்

தெல்லிப்பழை சுகாதார பகுதியின் சுகாதார அபிவிருத்திச்சபையின் ஆதரவில் இப்பகுதியில் 14 கிராமங்களில் சொறி சிரங்கு சிகிச்சை திட்டம் நடமாடும் வைத்திய பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த இத் திட்டம் ஜனவரி 9ம் திகதியுடன் பூர்த்தியடையும்.

அந்தந்த கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் வைத்து சொறி, சிரங்கு நோய்களுக்கான சிகிச்சைகள் அளிக்கப்படுவதுடன் வைத்திய ஆலோசனைகள், நோய்கள் பற்றிய அறிவுரைகளும் வழங்கப்படுகிறது.

இதற்கிடையில் தெல்லிப்பழையில் மக்களின் வசதி கருதி அம்புலன்ஸ் சேவை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாகனம் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையில் இருந்து சேவையில் ஈடுபட்டு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கத்தோலிக்க விழா

பருத்தித்துறை, வியா:

பருத்தித்துறை கத்தோலிக்க மாணவர் மன்றியத்தின் கிறிஸ்மஸ் ஒளிவிழா நாளை 27-ம் திகதி சென் புனோலி புற்றளை மகாவித்தியாலய ஹாட்லிக் கல்லூரி அரங்கில் நடைபெறவுள்ளது.

## ஒளிவிழாவும் நூல்வெளியீட்டு விழாவும்

யாழ்ப்பாணம், வெள்ளி,

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தினரும், 'நான்' உளவியல் மஞ்சரியினரும் இணைந்து ஒளிவிழாவினையும் நூல்வெளியீட்டு விழாவினையும் நடத்தவுள்ளனர்.

இவ்விரு விழாக்களும் நாளை சனிக்கிழமை மாலை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

திரு. துரை ஆரோக்கியதாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாக்களுக்கு அருட்தந்தை ஜீ ஏ பிரான்சிஸ் யோசவ் ஆசியுரை வழங்குவார். நத்தார் நிகழ்ச்சி, நத்தார் செய்தி டாக்டர் ஜே பீ சி. பிலிப்ஸின் பிரதம விருந்தினர் உரை என்பவற்றைத் தொடர்ந்து செம்பியன் செல்வன் எழுதிய குறுங்கதை நூறு, ஜேசப் பாலா எழுதிய உணராத உண்மைகள் எனும் நூல் வெளியீடும், வி பி எழுதிய விடுதலை இறையியல் நூல் வெளியீடும் நிகழும். இந்நூல்களுக்கான ஆய்வுரைகளை கலாநிதி அ. சண்முகதாஸ், கலாநிதி சோ கிருஷ்ணராஜா, திருமதி சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் நிகழ்த்துவர். [ப]

## அறிவியல் கருத்தரங்கு

(பருத்தித்துறை நிருபர்)

வடமராட்சி ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களால் நடாத்தப்படும் அறிவியல் கருத்தரங்கொன்று நாளை 27ம் திகதி புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை (மந்திகை) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49 Telegram: Eelanadu Telephone: 22389-24126


# மரண அறிவித்தல்

### க. சின்னத்தம்பி

உடுவில் க. சின்னத்தம்பி இளைப்பாறிய ஆசிரியர் காலமாகிவிட்டார். இவர் இளைப்பாறிய ஆசிரியை அரிநேசராணியின் அன்புக்கணவரும், ரதிவாணி (ரேபி), செல்வக்குமரன் (பாபு) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவர். அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை 27-12-86 காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காகப் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உடுவில் அரசாங்க வைத்தியசாலை எதிரில், "கலாநிதி", உடுவில். (C 6552)

### அருளையா ஏபிரஹாம்
[இளைப்பாறிய கல்வி ஆலோசகர்]

அருளையா ஏபிரஹாம் 25-12-86ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற அலன் ஏபிரஹாம் (யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்களின் அன்புமகனும் லீலாவின் அன்புக்கணவரும், சிலன் அருளையா (கிறீன்லேயிஸ் வங்கி கொழும்பு)வின் அன்புத்தந்தையாரும் சாந்தி (முஸ்லீம் வித்தியாலயம் மொரட்டுவா)யின் மாமனாரும், அலன், எட்வேட் (புனிதோமஸ் கல்லூரி கொழும்பு மாணவன்) ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் அடக்க ஆராதனையைக் குறித்த விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

73 றக்கா ரோட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். C 6554

### செல்வி புஸ்பராணி சோமசுந்தரம்

கொக்குவில் கிழக்கு பிரம்படி ஒழுங்கையைச்சேர்ந்த செல்வி புஸ்பராணி சோமசுந்தரம் காலமானார். இவர் திரு திருமதி சோமசுந்தரம், சரஸ்வதியின் அன்புமகளும், இரட்டினதேவி செல்வராணி, தங்கராணி, யோகமலர், செல்வமலர், பாமா, சந்திரபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், சங்கரலிங்கத்தின் மருமகளும், பவளத்தின் மருமகளும், உமா, அருந்ததி சோபனா கலியுகவரதன் ஆகியோரின் மைத்துனியும் முத்துத்துக்குமாரு - பவளம் ஆகியோரின் பெருமகளுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (26-12-86) வெள்ளிக்கிழமை காலை 8-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

(C 6553) தகவல்: சோமசுந்தரம்

### கனகரெட்னம் சிவஞானம் (மணி)

சந்தர்மடத்தைப் பிறப்பிடமாக கொண்டவரும், வட்டக்கச்சியில் வசித்தவருமான கனகரெட்னம் சிவஞானம் (முன்னாள் Asst Supdt Long Ville Estate Rattota) காலமானார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், சாமினி, துஷ்யந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும் திருநாவுக்கரசு, ஜெயமணி, புலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இளைப்பாறிய வட்டாரக்கல்வி அதிகாரி காலஞ்சென்ற இராசசிங்கம், திருமதி ராசசிங்கம் அவர்களின் அன்பு மருமகனும் சகாதேவன் (ஆசிரியர் கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி) காலஞ்சென்ற மகாதேவன் (UK) மைத்துனரும், சந்தர்மடம் கமலாதேவியின் வளர்ப்புத்தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (26-12-86) காலை 10-00 மணியளவில் கோப்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ. சகாதேவன்

5/1, ரயில் ரோட், வடக்கு,
நீராவியடி, யாழ்ப்பாணம். C 65[illegible]

# மரண அறிவித்தல்

### மனுவல் ஞானமுத்து

திரு. மனுவல் ஞானமுத்து காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மாகிறற்றின் அன்புக்கணவரும், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, பரமேஸ்வரி, ஈஸ்வரி, நிர்மலம்மா, சேவியர், உதயகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும் அலெக்ஸாண்டர், ராஜதுரை, ஜெயராஜா, சுவக்கின், சிறில் ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 27-12-86 நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அர்ச். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், யாபேருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல் தருபவர்: A. அலெக்ஸாண்டர்
2 பேக்கரி லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். C 6559

### வெற்றிவேலு செல்லத்துரை (ஐயக்கோன்)

வெற்றிவேலு செல்லத்துரை (ஐயக்கோன்) சட்டத்தரணி, முன்னைநாள், சென்றல் பஸ்கம்பனி மனேச்சர்) காலமானார். அன்னார் தவமணியின் அன்புக்கணவர் ஆவார். அன்னாருடைய இறுதிக்கிரியைகள் உடுவில் சித்தாவத்தை இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக 27-12-86 நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி.
சித்தாவத்தை,
உடுவில். A 6560

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org